**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 53/2020**

**Deposition of Witness for Prosecution : P.W.4**

| | | | |
|---|---|---|---|
| Name | : **கணேசன்** | Caste | : |
| Father/Husband Name | : **ராமராஜ்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(A3, A5, A6 Absent. Petition field and Allowed. All other Accused Present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 29.05.2025**

**முதல் விசாரணை**

நான் பி. மீனாட்சிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது உறவினர் ஆவார். சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 17.09.2017 ஆம் தேதி காலை சுமார் 07.10 மணிக்கு எதிரிகள் தாங்கள் புதியதாக வாங்கிய இடத்தில் விவசாயம் செய்வதற்காக அவர்களுக்கு பாத்தியப்படாத பொது கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துகொண்டிருந்தார்கள் என்றும், அதை அ.சா.1 தட்டி கேட்டபோது, எதிரிகள் அனைவரும் சேர்ந்து,

கம்பி, மண் வெட்டி, கடப்பாறை மற்றும் கம்பு ஆகியவற்றை வைத்துகொண்டு அ.சா.1ஐ பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் பேசி, மண் வெட்டியால் தாக்கியதில் அ.சா.1க்கு இடது காதில் காயம் ஏற்பட்டது என்றும், அதை தடுக்க வந்த அ.சா.2யும் அடித்து காயம் ஏற்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்து சென்றதாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் அவருடன் சமாதானம் செய்துகொண்டு, அவருக்கு ஆதரவாகவும், உண்மைக்கு புறம்பாகவும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**

G SATHIA NARAYANAN

Digitally signed by G SATHIA NARAYANAN
Date: 2025.05.29 14:47:57 +0530

**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 53/2020**

**Deposition of Witness for Prosecution : P.W.3**

| | | | |
|---|---|---|---|
| Name | : **பால்ராஜ்** | Caste | : |
| Father/Husband Name | : **விருமாண்டி** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(A3, A5, A6 Absent. Petition field and Allowed. All other Accused Present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 29.05.2025**

**முதல் விசாரணை**

நான் பி. மீனாட்சிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது உறவினர் ஆவார். சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 17.09.2017 ஆம் தேதி காலை சுமார் 07.10 மணிக்கு எதிரிகள் தாங்கள் புதியதாக வாங்கிய இடத்தில் விவசாயம் செய்வதற்காக அவர்களுக்கு பாத்தியப்படாத பொது கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துகொண்டிருந்தார்கள் என்றும், அதை அ.சா.1 தட்டி கேட்டபோது, எதிரிகள் அனைவரும் சேர்ந்து,

கம்பி, மண் வெட்டி, கடப்பாறை மற்றும் கம்பு ஆகியவற்றை வைத்துகொண்டு அ.சா.1ஐ பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் பேசி, மண் வெட்டியால் தாக்கியதில் அ.சா.1க்கு இடது காதில் காயம் ஏற்பட்டது என்றும், அதை தடுக்க வந்த அ.சா.2யும் அடித்து காயம் ஏற்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்து சென்றதாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் அவருடன் சமாதானம் செய்துகொண்டு, அவருக்கு ஆதரவாகவும், உண்மைக்கு புறம்பாகவும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**

G SATHIA NARAYANAN

Digitally signed by G SATHIA NARAYANAN
Date: 2025.05.29 14:48:04 +0530

**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 53/2020**

**Deposition of Witness for Prosecution : P.W.2**

| | | | |
|---|---|---|---|
| Name | : **செல்வி** | Caste | : |
| Father/Husband Name | : **காசிநாதன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(A3, A5, A6 Absent. Petition field and Allowed. All other Accused Present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 29.05.2025**

**முதல் விசாரணை**

நான் பி. மீனாட்சிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா ஆவார். கொப்புளம் பஞ்சாயத்து டோல்கேட் அருகே எங்களுக்கு 93 சென்ட்ம், எனது பெரியப்பா கூல்கருப்பதேவருக்கு 93 சென்ட்ம், மற்றொரு பெரியப்பா சின்னகண்ணு 93 சென்ட்ம் உள்ளது. மேற்படி நிலப்பிரச்சனை சம்பந்தமாக எங்களுக்கும் எதிரிகள் செல்லச்சாமி, ஜெயமணி, வனகிளி, சரஸ்வதி, நாகம்மாள் மற்றும் முத்துப்பாண்டி ஆகிய நபர்களுக்கும் பிரச்சனை இருந்தது. கடந்த 7 வருடங்களுக்கு முன்பு காலை 07.30 மணியளவில் எனது அம்மா அ.சா.1 சரஸ்வதி தண்ணீர் பாய்ச்ச சென்றபோது, எதிரிகள் அனைவரும் சேர்ந்து எனது அம்மாவின் இடது காதை கம்பு மற்றும் அரிவாள் வைத்து தாக்கி காதை அறுத்துவிட்டார்கள். நான் சண்டையை விலக்க சென்றேன். எதிரிகள்

அனைவரும் சேர்ந்து என்னை அடித்து ஊமைக்காயத்தை ஏற்படுத்தினார்கள். பின்னர் நானும் எனது அம்மாவும் செக்கானூரணி காவல் நிலையம் சென்று புகார் கொடுக்க சென்றோம். பின்னர் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் 3 நாட்கள் சிகிச்சை எடுத்துகொண்டோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்த இடம் நான் எனது அம்மா எதிரிகளை தாக்கியதாக எதிரி ஜெயமணி எங்கள்மீது புகார் கொடுத்து வழக்கு CC 185/2019 நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான் நீதிமன்றத்தில் ஆஜராகி வருகிறேன். செக்கானூரணி டோல்கேட் அருகே பூர்வீக சொத்தில் நாங்கள் கடை வைத்துள்ளோம் என்றால் சரிதான். எதிரி செல்லச்சாமி ராணுவத்தில் பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டார் என்றால் சரிதான். எதிரிகளின் அப்பாதான் எனது அப்பாவிற்கும் மற்றவருக்கும் மூத்தவர் என்றால் சரிதான். நான் எங்கள் ஊரில் திருமணம் முடித்து குடியிருந்து வருகிறேன். திருணமத்தின்போது எனக்கு எனது பெற்றோர் சீர்வரிசைகள் செய்து அனுப்பினார்கள் என்றாலும், டோல்கேட்டில் நான்தான் ஆக்கிரமைத்து கடை வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது அண்ணன் கடை வைத்துள்ளார். எனக்கு உள்ள பாகம் எங்கே என்று எனக்கு தெரியாது. எனது அண்ணன் எதிரிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் ஆக்கிரமைத்து கடை வைத்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகளின் இடத்தை நாங்கள் ஆக்கிரமைத்ததாக எதிரிகள் எங்கள்மீது திருமங்கலம் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு OS 108/2018 தொடர்ந்துள்ளார் என்றால் சரிதான். எதிரிகள் என் மீது வழக்கு போட்டதால் முன்விரோதத்தை மனதில் வைத்துகொண்டு எதிரிகளுக்கு

எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் செக்கானூரணி காவல் நிலையத்தில் அ.சா.1 கொடுத்த புகாரில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் போட்டுள்ளேன். நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், எதிரிகள் எங்களை தாக்கவில்லை என்றாலும், நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றாலும் எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

G SATHIA NARAYANAN

Digitally signed by G SATHIA NARAYANAN
Date: 2025.05.29 14:48:13 +0530